I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.127/2021                                        நாள் :  08.06.2026</u>

<u>பி.சா.1– திரு. முத்துப்பாண்டி.</u>

<u>IA.No. மனு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை</u>

போலீசில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி அதன்படி கிரைய பத்திரத்தை பதிவு செய்ய வரவில்லை என்றும், பணத்தை திருப்பி கேட்ட வாதிகளை மிரட்டியதாகவும் பி.சா.ஆ1 புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் பணத்தை வட்டிக்கு கொடுத்ததாகவும், வட்டிப் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்றும், அதனால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசில் விசாரணை நடந்து கொண்டிருந்தபோது என் வழக்கறிஞர் மூலமாக காவல்நிலையத்திற்கு சட்ட அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். நானும், என் மகனும் வெற்றுத்தாளிலும், வெற்று முத்திரைத்தாளிலும் கையொப்பமிட்டு கொடுத்ததாக எதிர் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் எனக்குத் தெரியாது. கந்தசாமி என்பவர் மூலம் வாதிகளிடம் நான் கடன் வாங்கியதாக எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ, சட்ட அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என் மகனின் கைபேசி எண் ஞாபகமில்லை. என் மகனின் கைபேசி வாட்ஸ் அப் செயலி மூலம் தாவா சொத்திற்கு உண்டா மூல ஆவணங்கள் அனைத்தையும் வா.சா.1க்கு என் மகன் அனுப்பினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் என் மகன் அவ்வாறு எதுவும் அனுப்பவில்லை. என் வழக்கின் படி முத்திரைத்தாள் மற்றும் தாள்களில் X குறியிடப்பட்டுள்ள இடத்தில் நான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ1ல் X குறியீடு எந்த

இடத்திலும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை ஒரு சேட்டிடம் அடமானம் வைத்திருந்தேன் என்றால் சரிதான். அடமானத்தை மீட்டுவிட்டேனா என்றால் அடமானம் காலாவதியாகிவிட்டதால் ரத்து செய்ய வேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஆனால் பணத்தை செலுத்திவிட்டேன். வாதிகளிடம் கடன் வாங்குவதற்கு 2, 3 வருடங்களுக்கு முன்பாகவே அடமானத்தை மீட்டுவிட்டேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. ரூபாய் 18 லட்சம் கொடுத்து அடமானத்தை மீட்டேன். ரூபாய் 18 லட்சம் என் தனிப்பட்ட முறையில் வந்தது என்று காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை கிரையம் செய்வதற்காக வா.சா.ஆ 1ன் படி ஒப்பந்தம் போட்டுவிட்டு தற்போது கிரையத்தை எழுதிக் கொடுக்கக்கூடாது என்பதற்காக தவறான எதிர்வழக்காடுகின்றேன் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.